ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௰. ஸ்ரீமுக ஐப்பசி-கார்த்திகைமீ பகுதி ௩-௪
**Vol. 10.** Oct., November & December 33. **No. 3, 4**

## ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தின் முன்னேற்றம்.

[ஸ்ரீகாஞ்சீ உபயவேதாந்த வித்வான் அண்ணங்கராசாரிய ஸ்வாமி].

இவ்வுலகின்கண் ஏற்பட்டிருக்கும் மதங்கட்கோ ஸம்பிரதாயங்கட்கோ அளவில்லை. "வணங்குந் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி, அவையவைதோறு அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்" என்ற நம்மாழ்வாரருளிச் செயலின்படி வழிபாடு செய்யும் வகைகளும் சமயங்களும் வழிபடு தெய்வங்களும் பலபலவே யென்பதில் யாருக்கும் ஆக்ஷேபமிராது.

இவற்றுள் நமது ஸ்ரீ வைஷ்ணவஸமயம் பரமவைதிகமும், ஸர்வபூதஹிதமும், விசாலமான நல்ல நோக்கங்கள் கொண்டதுமாய் விளங்குகின்றதென்று இச்சமயத்தின் உள்மருமங்களை உணர்ந்துள்ள பேராசிரியர்கள் உகந்து கூறுகின்றனர். இங்ஙனம் பரமபவித்திரமான இச்சமயத்தைப் பல வழிகளிலும் வளர்க்க முயல்வதே உண்மையான ஸ்ரீ வைஷ்ணவர்களின் கடமையாகும்.

ஒருமதம் அல்லது ஸம்பிரதாயம் அபிவிருத்தியடைய வேண்டுவது அதன் கொள்கைகளை ஏற்று அதன்படி நடக்கும் ஜனங்களின் அபிவிருத்தியைச் சார்ந்ததாகும். நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயக் கொள்கைகளை அங்கீகரித்து அதன்படி நடக்கும் ஜனங்கள் ஸ்ரீ ஆளவந்தார் காலத்தில் எவ்வளவுபேர் இருந்தனரென்றும், பிறகு எம்

பெருமானார் காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு பெருகிற்றென்றும் அதன்பிறகு வேதாந்ததேசிகன் காலத்திலும் மணவாளமாமுனிகள் காலத்திலும் என்ன அபிவிருத்தி ஏற்பட்டதென்றும், தற்காலமிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களின் எண்ணிக்கை என்னவென்றும் கண்டுகொள்ள நமக்கு யாதொரு வழியுமில்லாமலிருக்கின்றது. பொதுவாய்ச் சொல்லப் புகுந்தால் ஆளவந்தார் காலத்திலிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் பிற்காலத்திய ஒவ்வொரு ஆசாரியரின் காலத்திலும் ஸ்ரீ வைஷ்ணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டுதான் வந்ததென்று சொல்லலாம். மேலே குறிப்பிட்ட ஆசாரியர்களின் காலத்திலிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களின் எண்ணிக்கையைவிட இப்போதுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களின் எண்ணிக்கை அதிகமானதென்றும் நாம் ஒருவாறு அநுமானத்தின் பேரில் சொல்லலாம்.

ஆனால், நம் பூர்வாசாரியர்கள் காலத்தில் ஏற்பட்ட அபிவிருத்திக்கும் பிற்காலத்து அபிவிருத்திக்கும் வாசியுண்டு. பூர்வாசாரியர்களோ வென்னில், புறமதத்திலிருந்தவர்களைத் திருத்தி ஸ்ரீவைஷ்ணவ ஸமயத்தில் ஈடுபடுத்திக்கொண்டார்கள். ஆனதுபற்றியே அக்காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களின் எண் அதிகரித்தது. இப்பால் ஏற்படும் அபிவிருத்தியெல்லாம் ஸந்தானத்தின் அபிவிருத்தி காரணமாக ஏற்பட்டதென்றே சொல்லத்தகும்.

பூருவாசாரியர்கட்குப்பின் யாரும் புறமதத்தவர்களைத் திருத்திப் பணிகொள்ளவில்லை யென்னலாம். முக்யமாய்த் தென்னிந்தியாவில் இவ்வகையான அபிவிருத்தி ஏற்படவில்லை. ஒருகால் சிலர் புதிதாய் ஸ்ரீ வைஷ்ணவர்களாக்கப்பட்டிருந்தாலும் பிராமணர்கள் அவ்விதம் ஸ்ரீ வைஷ்ணவர்களாக்கப்பட்டிருக்கவில்லையென்று நிச்சயமாய்ச்சொல்லலாம். வடஇந்தியாவில் புதிதாய்ப் புறமதத்திலிருந்து ஸ்ரீ வைஷ்ணவமதத்தில் ஜனங்கள் வந்துசேருவது இப்பொழுதும் நடந்துவருகிறதென்று சொல்லக்கூடுமாயினும் அப்படி ஸ்ரீ வைஷ்ணவமதத்தில்சேரும் ஜனங்களின் தொகை மிக்க ஸ்வல்பமேயாகும். தென்னிந்தியாவிலோ வெனில், புறமதத்தை அவலம்பித்த பிராமணர்கள் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் வந்து சேருவதென்பது அடியோடு நின்றுவிட்டது. இதில் யாதும் ஐயமில்லை.

இதற்குக் காரணம் என்னவென்று ஆராயவேண்டும். புறமதத்தி லிருந்தவர்களைப் போதனையால் திருத்தி ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் சேரும்படி செய்யும் வழக்கம் நின்றுபோனதற்குப் பல காரணங்கள் கூறலாமாயினும் முக்கியமாய் இரண்டு காரணங்கள் கூறலாம். முதலாவது—பூருவாசாரியர்போல் ஜ்ஞாநம் பக்தி விரக்தி முதலிய நற்குணங்கள் பொருந்தித் தமது அலௌகிகமான சக்தியாலும், போதநா சக்தியாலும், தெய்வ பலத்தாலும் புறமதத்தவர்களை வசிகரித்துத் திருத்தி ஸ்ரீ வைஷ்ணவமதத்திற் சேரும்படி செய்யக்கூடிய மஹிமை பொருந்தியவரும் ஸம்பிரதாயத்தின் அபிவிருத்தியையே முக்கியப் பிரயோஜனமாகக் கொண்டு சுயநலங் கருதாமல் அல்லும் பகலும் உழைக்கக்கூடியவருமான ஆசாரியர்கள் இக்காலத்தில் இல்லாமலிருப்பதாம். இரண்டாவது—புறமதத்திலிருப்பவர்கள் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை அவலம்பிப்பதில் உள்ள ஓர் பெருந் தடையாம். இதனை இங்கு நன்கு விவரிக்கின்றோம்: முற்காலத்தில் புறமதத்திலிருந்து ஒருவனைத் திருத்தி ஸ்ரீ வைஷ்ணவ மதத்திற் சேர்த்துக்கொண்ட பின், அவனோடு பரம்பரை ஸ்ரீ வைஷ்ணவர்களோடொக்க ஸமபங்க்தி போஜனம் பெண் கொடுத்து வாங்கல் முதலிய ஸகலவிதமான ஸம்பந்தங்களையும் ஏற்படுத்திக்கொள்ள எவ்விதமான விரோதமும் இருக்கவில்லை. இன்று புறமதஸ்தனாயிருந்தவன் நாளையே ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை அவலம்பித்து ஸ்ரீ வைஷ்ணவர்களோடு ஒரு கோஷ்டியாய்க் கலந்துகொள்வது ஸாத்யமாக இருந்தது. அந்தப் புதிய ஸ்ரீ வைஷ்ணவனையும் மற்ற ஸ்ரீ வைஷ்ணவர்கள் தங்களோடு ஸமமாகப் பாவித்து வந்தனர். இவ்வழக்கம் இப்பொழுது இல்லை. ஒரு ஸ்மார்த்தரோ அல்லது வேறு மதஸ்தரோ புதிதாக ஸ்ரீவைஷ்ணவமதத்தில் ஈடுபட்டு அந்வயித்தால் அவரோடு ஸமபங்க்தி போஜனம் செய்தலும் மறுக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலேயே இவ்வேற்றுமை அதிகமாகப் பாராட்டப்படுகின்றது. தெலுங்கு தேசங்களில் இவ்வேற்றுமை அதிகமாகப் பாராட்டப்படுவதில்லை யென்றறிகின்றோம்.

புதிதாய் ஒருவர் ஸ்ரீவைஷ்ணவமதத்திற் சேர்ந்தால் அவரை 'வைஷ்ணவேஷ்டி' செய்து தங்களோடு ஸமானமாய்ச் சேர்த்துக் கொள்ளத் தெலுங்கு தேசத்திய ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். தமிழ்நாட்டில் இவ்வழக்கம் இல்லை. பாரம்பரையாக ஸ்ரீ

வைஷ்ணவர்களாயிருப்பவர்களே அநாவசியகமாய்ப் பல உட்பிரிவுகளைக் கற்பித்துக்கொண்டு தனித்தனித் திரைகள் போட்டுக்கொண்டு போஜனம் செய்ய முற்படும்போது புதிய ஸ்ரீவைஷ்ணவர்களை ஸம பங்க்தியில் உட்காரவைக்க இசைவார்களோ இவர்கள்!. பூருவாசாரியர்களின்காலத்தில் இப்படியிருந்ததில்லை. நம் பூருவாசாரியர்களுள் பலர் புறமதத்தில் நின்று திருந்தி யெழுந்தருளினவர்களே. இதிஹாஸங்களில் இவ்வரலாற்றினை ஸ்பஷ்டமாகக் காணலாம். நாமும் வடமாள் என்று சொல்லப்படுகிற ஸ்மார்த்த ப்ராஹ்மணர்களாயிருந்தவர்களே. வடமாள், ப்ருஹத் சரணுள் முதலிய பலவித ப்ராஹ்மணர்கள் முற்காலத்தில் நம் பூருவாசாரியர்களால் ஸ்ரீவைஷ்ணவர்களாக்கப்பட்டார்கள். நாம் அன்னவர்களின் ஸந்ததியேயென்று பெரியோர் கூறுவதுண்டு.

புறமதத்திலிருந்து புதிதாய் ஒருவர் ஸ்ரீவைஷ்ணவ ஸமயத்திற் சேர்ந்தால் அவரோடு நாம் ஸமானமான வியவஹாரத்தை நடத்த முற்படாமலிருப்பதே ஸ்ரீவைஷ்ணவாபிவிருத்திக்குப் பெருந்தடையாயிருக்கிறதென்பது நம்முடைய அபிப்ராயம். புறமதத்திலுள்ள ஒருவன் ஸ்ரீவைஷ்ணவமதத்தில் அந்வயிக்க விரும்பினாலும் நாம் அவனைச் சமானமாகப் பாவியாமல் வேற்றுமையாக நடத்தமுயல்வதை முன்னிட்டு, தம்முடைய மநோரதப்படி நடக்க அவர் பிரவர்த்திக்கக் கூடாமலிருக்கிறது. இவ்விஷயத்தை ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும் ஆழ்ந்து ஆலோசிக்க வேணும்.

இத்தடையை நீக்க விரும்புவது அவசியமல்லவா? நமது சாஸ்திரங்களில் நான்கு வருணங்கள் வெகுகாலமாக இப்பரதகண்டத்தில் இருந்துவருவதாகக் காண்கிறது உண்மை. இவ்வளவேயன்றி அவற்றில் அவாந்தரபேதங்கள் காணப்படவில்லை. முக்கியமாக தேசபேதங்களைக்கொண்டே ஒவ்வொரு ஜாதியிலும் உட்பிரிவுகள் ஏற்பட்டன. த்ராவிடர்கள், ஆந்த்ரர்கள், கௌடர்கள் என்றிவ்வாறான உட்பிரிவுகளின் பெயர்களை நோக்குங்கால் இவ்விஷயம் வெளியாகும். தேசபேதங்களாலும அந்தந்த தேசங்களின நிலைமைகளாலும் மற்றும் பல காரணங்களாலும் இந்த ப்ராஹ்மணர்களின் ஆசாராநுஷ்டாநங்களும் சிறிது மாறுபாடடைந்தன. ஆகவே,

"𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌮𑌮𑍈𑌵𑌾𑌜𑍍𑌞𑌾 𑌯𑌸𑍍𑌤𑌾𑌮𑍁𑌲𑍍𑌲𑌙𑍍𑌘𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌆𑌜𑍍𑌞𑌾𑌚𑍍𑌛𑍇𑌦𑍀 𑌮𑌮 𑌦𑍍𑌰𑍋𑌹𑍀 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌃 ॥

என்று சோதிவாய்திறந்துபணித்த பகவானல் வரம்பிடப்பட்ட வர்ணுச்ரம வியவஸ்தையை விடாமல் நாம் பற்றிநின்றாலும் பிற்காலத்தில் பலவிதமான காரணங்களால் ஏற்பட்ட உட்பிரிவுகளைப் பிரமாதமாகப் பாவித்து வேற்றுமை பாராட்டுவது அவ்வளவு பொருத்தமுடையதா? என்று நமது நெஞ்சு தளும்பிக்கிடக்கின்றது.

பிராமணர்களெல்லாம் ஒரே வர்ணத்தவர்களென்கிற பொதுவான கொள்கையை வைத்துக்கொண்டு ஸாத்யமானவரையில் ஒன்றுபட்டு நிற்பதே காலத்திற்கு அநுகூலமாகும் என்று தோன்றுகின்றது. நாம் அவ்வளவு தூரம் பேதங்களை ஒழித்துவிடவேணுமென்றுகூட இப்பொழுது சொல்ல வரவில்லை. நம் பூருவாசாரியர்களின் அநுஷ்டானத்தைப் பின்பற்றிப் புறமதத்திலிருந்து ஒரு நற்குலப் பிராமணர் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற் சேர்ந்து ஆசாரங்களையும் கற்று நல்லொழுக்கம் மிக்கு நேர்படுவாரேயானல் அவரை வேற்றுமனிதராகக் கொள்ளாமல் ஸமத்வபுத்தியோடு ஆதரிக்கமுற்படவேண்டுவது அவசியமானதென்று இவ்வளவே சொல்லுகின்றோம். இங்ஙனம் வர்த்திப்பது சாஸ்திரவிருத்தமென்று யாரும் சொல்ல முடியாது. நம் பூருவர்கள் அநுஷ்டித்துக் காட்டியிருப்பதால் சிஷ்டாசாரவிருத்தமென்றும் சொல்லமுடியாது. தெலுங்கு தேசத்திலும் வடஇந்தியாவிலும் இத்தகைய வழக்கம் இக்காலத்திலும் இருந்து வருகிறதென்பதையும் நாம் குறிக்கொளல் நன்று.

கிரிஸ்துவர்களும் மஹமதியர்களும் புறமதத்தவர்களையும் பல விதங்களாலும் போதித்து மயக்கித் தம் மதத்தில் சேர்த்துக்கொள்ள எவ்வளவு ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்களென்பதை நாம் தனிப்பட எடுத்துக்காட்டவேண்டியதில்லை. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவரும் இதைத் தாமாகவே கண்டுகொள்ளலாம். கிரிஸ்துவர்கள் நமது நாட்டில்வந்து லக்ஷ கோடி கணக்கான பணத்தைச் செலவழிக்கிறார்கள். நாம் நம்முடைய தேசத்திலுள்ளவர்களையே நம்மதத்தில் சேர்த்துக்கொள்ள மனமில்லாதவர்களாயிருக்கிறோம். நமது ஸ்ரீ வைஷ்ணவஸம்பிரதாயத்தின் கொள்கைகளோ மிகவும் சிறந்தவை. எல்லோ

ரும் இக்கொள்கைகளைக் கண்டு மிக வியக்கின்றனர். ஸ்ரீ வைஷ்ணவ மதமே ஸமத்வமென்கிற ஒரு ஆதாரத்தின்பேரில் நிற்கிறது. ஸமத்வமில்லாதபோது ஸ்ரீ வைஷ்ணவத்வமில்லை நமது ஸித்தாந்தங்கள் எட்டளவில் நிற்கின்றன. இதனால் நாம் வர்ணாச்ரம தர்ம வியவஸ்தைகளை வரம்பழிக்கவேணுமென்று பிரசாரம் செய்ய முற்படுவதாக யாரும் தவறான அர்த்தம் கொள்ளலாகாது. ஸமத்வபாவனையை வரம்பு கடந்து பெருகவிட வேணுமென்று வாதிக்கிற தர்ம விருத்த வாதிகளின் வாதங்களை நாம் கண்டிப்பவர்களேயாவோம். ஈண்டு நாம் உரைக்கும் விஷயம் வேறு. தர்ம சாஸ்திரங்களிலுள்ள நிபந்தனைகட்குச் சிறிதும் முரண்பாடின்றி நடந்துகொள்ளக்கூடிய வழிகள் இருக்க, அவ்வழிகளிலும் கண்ணோட்டமின்றி யிருப்பானேன்? என்கிற இவ்வளவையே நாம் ஈண்டுரைக்க வந்தோம்.

அன்றியும், இங்ஙனம் எழுதுகின்ற நாம் பரோபதேசத்தில் பண்டிதர்களாயிருக்கின்றோமே யன்றி ஸ்வாநுஷ்டானத்தில் மிகவும் வழுவியே யுள்ளோம். ஆசார்யபும்ஸ்த்வம் முதலிய பல்வகைச் சிறப்புக்களாலும் நாமே மேம்பாடுடையோமென்றும் அயல் திருமாளிகைக்காரரும் நம்வீட்டில் அடிவைக்கவும் தகாதென்றும் இப்படிப்பட்ட மேணிப்பான கொள்கைகளில் நாம் மிக்க மார்பு நெறிப்புடையோம். 'இந்த நிலைமை நம்மளவிலாது தொலைந்தால் போதும்' என்கிற அநுதாபவுணர்ச்சியே இந்த வியாஸமெழுதற்கு அடியாய் நின்றதென்பது உண்மை.

---

ஸ்ரீ

# அஜ்ஞான விசேஷம்.

உலகத்திலுள்ளவர்கட்குப் பாபகாரணமாக அஜ்ஞானமுண்டாவதுண்டு. அஜ்ஞானமாவது-பொய்யறிவாம். இவ்வஜ்ஞானமே பிறப்புக்குக் காரணமாயிருக்கும். "பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும், மருளானும் மாணாப்பிறப்பு" என்று திருவள்ளுவரும் மெய்ப்பொருளல்லாதவற்றை மெய்ப்பொருளென்றுணரும் பொய்யறி

வினல் துன்பத்தைத் தரத்தக்க பிறப்புண்டாம்; என்றுரைத்தார். "ஜ்ஞாநாந் மோக்ஷ: அஜ்ஞாநாத் ஸம்ஸார:" என்பதும் இப்பொருளையே யுணர்த்தும். அஜ்ஞான வாசனையுள்ளவரையும் பிறப்பொழிய மாட்டாது. இவ்வஜ்ஞானத்தை யகற்றுவதற்காகவே அறிவொழுக்கங்களிற் சிறந்த ஆசார்யனை யடைந்து அறிவுநூல்களை ஓதியுணர்கிறார்கள். இந்த அஜ்ஞானம் வெறுக்கத்தக்கது. இக்கொடுமையுடைய இதனை ஓர் விஷயமாக இங்கு எடுத்துக்கொள்ளவில்லை. இந்த அஜ்ஞானத்திற்கு எதிர்த்தட்டாய், கொண்டாடத்தக்கதாயுள்ள ஓர் அஜ்ஞானமுண்டு. அந்த அஜ்ஞானந்தான் 'அஜ்ஞான விசேஷம்' என்ற தலைப்பின் கீழ் எழுதப் பெறுகிறது.

இந்த அஜ்ஞானமாவது பாபமற்ற பெரியோர்கட்குண்டாவதொன்றும். பாபமற்ற பெரியோர்கட்கும் 'அஜ்ஞானமுண்டாவதுண்டோ? இஃதென்ன வியப்பு! என்று சிலர் நினைக்கக்கூடும். இவர்கட்குக் கர்மம் காரணமாக வருகிற அஜ்ஞானமுண்டாவதில்லை. எம்பெருமான் திருமேனியின் ஈடுபாடுபற்றி ஓர் அஜ்ஞானம் இவர்கட்கு வருவதுண்டு. எம்பெருமான் திருமேனியின் இயல்பை லோகதேசிகன் "விக்ரஹந்தான் ஸ்வரூபகுணங்களிலுங் காட்டில் அத்யந்தாபிமதமாய், ஸ்வாநுரூபமாய், நித்யமாய், சேதன தேஹம்போலே ஜ்ஞானமயமான ஸ்வரூபத்தை மறைக்கையன்றிக்கே, மாணிக்கச் செப்பிலே பொன்னையிட்டு வைத்தாற்போலே யிருக்க, பொன்னுருவான திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரகாசமாய், நிரவதிக தேஜோரூபமாய், ஸௌகுமார்யாதி கல்யாணகுணகண நிதியாய், யோகித்யேயமாய், ஸகலஜநமநோஹரமாய், ஸமஸ்தபோக வைராக்ய ஜநகமாய், நித்யமுக்தாநுபாவ்யமாய், வாசத்தடம்போல ஸகல தாபஹரமாய், அநந்தாவதாரகந்தமாய், ஸர்வரக்ஷகமாய், ஸர்வாச்ரயமாய், அஸ்த்ரபூஷண பூஷிதமாயிருக்கும்" என்று அருளிச்செய்தார். திருமேனி இத்தனை பெருமையுடையதாயிருப்பதால், எத்தனை பெருமையுடையாரின் மனத்தையும் மயக்கும் தன்மையதாயிருக்கும்.

"பொருளென் றிவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல் மருளில் வண்குருகூர் வண்சடகோபன்" என்று ஆழ்வார் ஸர்வேசுவரனுடைய கல்யாணகுணவிஷயமாக ஒரு அஜ்ஞானமுமில்லையென்று

அருளிச் செய்தவர், திருமாலிருஞ்சோலை அழகருடைய திருமேனி அழகினைக்கண்டு, "முடிச்சோதியாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ" கிரீடத்தினொளி முகத்தினொளியோ? அல்லது முகத்தினொளி கிரீடத்தினொளியோ? என்று சம்சயமுடையவராய் நின்றார். இதனால் எம்பெருமானுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தில் கண்வைத்த போது அவனுடைய அபார சக்தியெல்லாம் விளங்குமென்பதும், அவனுடைய திருமேனியின் அழகில் ஈடுபட்டபோது அவ்வழகு ஈடுபட்டவர்களை மயக்குமென்பதும், மயங்கியவர்கள் தம்மைச் சக்தராகவும், ஸர்வேசுவரனை அசக்தனாகவும் கருதி, அவன் வடிவழகிற்கு ஒரு தீங்கும் வாராதிருக்க வேண்டுமென்று வாழ்த்துக் கூறத்தொடங்குவர்களென்பதும் விளங்கின. இங்ஙனம் எம்பெருமானுக்கு வாழ்த்துக்கூறத் தொடங்கிய அநுஷ்டானம், பெரியாழ்வார்பக்கல் மிகவும் தெளிவாகக் காணலாம். தசரதசக்ரவர்த்தி, ஜனகராஜன் சீதாபிராட்டியார் விசுவாமித்ரன் தண்டகாரண்ய வாசிகளான ருஷிகள் திருவடி சுக்ரீவன் குகப்பெருமாள் அவருடைய பரிகரம் ஸ்ரீ நந்தகோபர் ஸ்ரீ விதுரர் பிள்ளையுறங்காவில்லிதாஸர் முதலானவர்களும் எம்பெருமானுடைய வடிவழகில் மயங்கியவராவர். அவன் திருமேனி அபாரஒளியுடையதாயிருக்குமென்பதை ஆழ்வார், "சோதிவெள்ளத்தினுள்ளே யெழுவதோருரு" என்று அருளிச்செய்தார். இத்தனை பேரழகுடையதில் ஈடுபட்டவர்கள் மயங்காதொழிவரோ?

எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைப் பரமபதத்திலிருக்கிற நித்யஸூரிகள் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டுளது. இங்கே கவனிக்கத்தக்கதொன்றுண்டு. நித்யஸூரிகள் எப்பொழுதும் அவன் திருமேனியைப்பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்பது நமது அநுபோகத்திற்கு விரோதமாயிருக்கும். நடனசாலையில் ஒரு சீனில் ஓரிருவராகிய வேஷதாரிகள் மாத்திரம் நடிப்பர்களாகில் அந்நாடகத்தைக் காணப்புகுவார் நீண்டநேரம் கண்டு களிக்கமாட்டார்கள். அடிக்கடி அபூர்வ சீன்களும், பலவேஷங்கொண்ட நடிகர்களும் அச்சாலையிலிருப்பரேல் காணப்புகுவார் நீண்டநேரம் கண்டு களிப்பார்கள். இது நாம் கண்ட அநுபோக விஷயம். அங்ஙனமிருக்க நித்யஸூரிகள் காட்சிக்கு விஷ

யம் எம்பெருமான் திருமேனி ஒன்றேயானால், அதனை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்பது எவ்வாறு பொருந்துமென்று சந்தேகம் தோன்றும் அவனுடைய திருமேனி க்ஷணந்தோறும் வெவ்வேறு வகையான சோபையைத் தருவதால், அதனை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருந்தால் தெவிட்டாது. "திருமேனி தான் நித்யாபூர்வமாயிறே யிருப்பது" என்று பெரியார் அருளிச் செய்வதும் இதனை வலியுறுத்தும்.

இன்னும் இவ்விஷயத்தைக் கம்பர் நயம்படக் கூறுவதும் இங் கறியத்தக்கது. "தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற்கமல மன்ன, தாள் கண்டார் தாளேகண்டார் தடக்கை கண்டாருமஃதே, வாள்கொண்ட கண்ணார் யாரே-வடிவினை முடியக்கண்டார்" எம்பெருமானுடைய திருமேனி முழுமையும் க்ஷணந்தோறும் வெவ்வேறு சோபையைத் தருகிறதென்பது அத்தனை பெருமையன்றே. அவனுடைய ஒவ்வொரு அவயவமும் க்ஷணந்தோறும அளவிடவொண்ணாத விசித்ரமான சோபையைத்தருமாதலால், "தோள்கண்டார் தோளே கண்டார்" என்றார். தோளைகண்டார் ஏனைய அவயவங்களைக்காண வில்லையென்பார் 'தோளே கண்டார்' என்று பிரிநிலை ஏகாரத்தாற் கூறினார். அதன் அழகாகிய ஆழமுடைய வெள்ளத்தில் ஆழ்ந்து விடுவரே யல்லது அதன கரை கண்டெழுவாரில்லை யென்பார் யாரே வடிவினை முடியக்கண்டார் என்றார்.

திருமேனியின் வைபவத்தைத திருமங்கைமன்னனும், -

"வண்டமரும் வனமாலை
மணிமுடிமேல் மணநாறு மென்கின்றளால்
உண்டிவர் பாலன் பெனக்கென்று
ஒருகாலும் பிரிகிலேனென்கின்றளால்
பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூரில்
யாமென்றே பயில்கின்றளால்
கண்டவர்தம் மனம் வழங்கும்
கண்ணபுரத்தம்மானைக்கண்டாள் கொலோ"

என்று அருளிச்செய்தார். இது தாய்க்கூற்றாக அருளிய பாசுரம். திருக்கண்ணபுரத்தெம்பெருமான் திருமேனியில் ஈடுபட்டவரெல்லாம் மனமிழந்தவராய்விடுவர். என் வயிற்றிற் பிறந்த இவளும் அவ்வெம் பெருமானிடத்தில் ஈடுபட்ட மனத்தையுடையவளாய் மதிமயங்கின ளாதலால் தாய் முன்னிலையில் இன்னது பேசுவதென்ற முறைதெரி யாமல், வண்டுகள் மொய்க்கப்பெற்ற திருத்துழாய்மாலை அவன் திரு முடியில் அமரப்பெற்றதால் மணங்கமழாநிற்கும் என்கிறாள். அவ னோடு கலந்து பரிமாறிக் கண்டறிந்ததொன்றை என் முன்னிலையிற் சொல்வது அழகன்றென்பதை யறியாததோடு, அவரிடத்தில் எனக்கு நிலைபேறுடைய அன்பிருத்தலால் அவரை ஒருபோதும் விட்டுப்பிரி யேன் என்கிறாள். இவள் நாயகனோடு கலந்து அநுபவித்தலையும், விட்டுப் பிரியாமையையும் உணர்த்திப் பின், 'பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூரில் யாம்' என்று பலகாலுஞ் சொல்லுகிறாள். இஃதென்ன விந்தை! இஃதென்ன மதிமயக்கம்! ஆனால் இவள் மதிமயக்கும் விஷ யத்திற் கண்வைத்திருக்கவேண்டும் என்று நிச்சயித்து, 'கண்டவர் தம் மனம் வழங்கும் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ' என் கிறாள் திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸௌரிராஜப் பெருமாளின் திருமேனியழகில் ஈடுபட்டவர்கள் இதர விஷயமொன்று மறியாது, அதிலே ஆழ்ந்துவிடுவர்களென்பதைக் காரணமாகிய மனத் தின் மேலிட்டுக் கூறினாள். மனத்தை வழங்குவதாவது தனக்கோ ருரிமையின்றிக் கொடுத்துவிடுதல். இன்னும், 'பண்டிவரைக் கண் டறிவ தெவ்வூரில் யாம்' என்பதைப் படுததலோசையாகக்கூறி, இவர் எவ்விடத்திலோ காணப்பட்டவர்போல் தோற்றுகின்றனரே; எவ்வி டத்தவராக விருக்கலாம் என்று ஆராய்கிறாள்; என்று பொருள் கொள்க. 'பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூரில்யாம்' என்பதை எடுத்த லோசையாகக் கூறி முன்பு இவரை எவ்விடத்திலும் கண்டறியோம் என்று பொருள்கொள்க அவன் திருமேனியின் அழகை ஒருமுறை நோக்கியபோது கண்டதுபோல் தோற்றும். அதுவாகி நின்று பழகப் பழகக் காணாததுபோல் தோற்றும் இதனால் உலகத்திலுள்ள விஷ யத்திற்கும், இதற்குமுள்ள வேறுபாடு யறிந்துகொள்க. நாள் திங்கள் ஆண்டூழி யூழிதோறும் அநுபவிக்க வநுபவிக்க அபூர்வமே தோற்று மென்றால் இதன் பெருமை உரைக்கலாகுமோ?

இதுவரையுங் கூறியதினல் எம்பெருமான் திருமேனி அளவில்லாத விசித்திரமான பேரழகுடையதென்றும், அவ்வழகு அறிவிற் சிறந்த பெரியாரையும் வசப்படுத்தி மதிமயங்கச் செய்யுமென்றும் உரைக்கப்பட்டன. இனி அறிவிற்சிறந்த பெரியார்கட்கு இம்மதி மயக்கம் எப்பொழுதுமிருக்குமோ? ஒருகாலத்தி லகன்று விடுமோ? என்ற விஷயம் ஆராயப்படும்.—

பாப காரணம் பற்றிப் பிறக்கிற ஜீவர்கட்கும், அவர்களை நல் வழிப்படுத்தக் கருதும் எம்பெருமானுக்கும் பிறப்பு அளவற்றன வானுலும், ஜீவர்கட்கு எம்பெருமானுடைய அநுக்ரஹமோ, பெரியாருடைய அநுக்ரஹமோ உண்டானபோது பிறப்பு அகன்றுவிடும். எம்பெருமான் இச்சையாற் பிறக்கிருன். அவன் இச்சையும் நித்திய மான இச்சையாதலால் அவன் அவதாரத்திற்கு ஒழிவில்லை. அது போலக் கர்மம் காரணமாக உண்டாகின்ற அஜ்ஞானம் தத்துவ ஞானத்தால் அகன்றுவிடும். இந்த அஜ்ஞானம், எம்பெருமானுடைய நித்தியமான திருமேனியின் அழகுபற்றி வந்ததால் இது நித்திய மாய்ச்செல்லும். இதனைத் திருவநந்தாழ்வான் (ஆதிசேஷன்) அனுஷ்டானத்தா லறியலாம்.

பரமபதத்தில் நித்தியஸூரிகள் சாமகானம் செய்துகொண்டு எம்பெருமானைக் கிட்டி அநுபவிக்க வரும்போது, அவ் வாரவாரத்தைக்கேட்டு 'நம்பிறைவனுக்கு என்ன தீங்கு வருமோ?' என்று திருவநந்தாழ்வான் விஷாக்கினியை உமிழ்வர். இதனை, "ஆங்கார வாரமது கேட்டழலுமிழும், பூங்கார ரவணையான்......" என்பதா லறியலாம். பரமபதமாகிய நித்தியவிபூதி ஒளி மயமாய் விளங்குவது; காலை மாலை என்ற கால வேறுபாடற்றது; மேன்மேலும் பகவத் பக்தியை யுண்டு பண்ணத்தக்கது; இவ் விபூதியைப்போ லழியாமல் நித்யமாயிருக்கும் இயல்பினை யுடையது; அங்கிருக்கும் நித்ய முக்தர்கள், குரோதமின்றி எல்லோரும் கூடியிருந்து எம்பெருமானைக் கண்டு ஆநந்தித்துக் கொண்டிருக்கும் தன்மையினர். இவ்வாறிருக்க நித்யஸூரிகளில் தலைவராயிருக்கிற திருவநந்தாழ்வான் கோபமுடையவராய் விஷாக்கினியை உமிழ்கின்ருர் என்பது எவ்வாறு பொருந்துமெனின்? எம்பெருமானிடத்திலுள்ள அன்பின்மிகுதிபற்றி இவருக்கு இக்கோபங்

தோன்றியதால் பொருந்துமென்க. இதன் விவரம் பின் குறிப்பிடு வதால் அறிந்துகொள்ளலாம்.

திருவரங்தாழ்வான் ஒருநாளும் ஸம்ஸாரஸம்பந்தமே இல்லாதவ ராதலால் கோபமுண்டாவதற்குக்காரணம் அவருமாகமாட்டார். தெளி விசும்பாகிய பரமபதம் பகத்விஷய ஞானத்தையே விளைக்கக்கூடியதா யிருப்பதால் இந்தத்தேச ஸம்பந்தத்தால் கோபமுண்டாயிற்றென்றும் சொல்லமுடியாது. பின்னை எதனாலுண்டாயிற்று என்றால்; எம்பெரு மானுடைய திருமேனியின் வடிவழகின் இனிமையே, அவருக்குக் கோபத்தையுண்டாக்கியதெனல் வேண்டும். திருவரங்தாழ்வான் ஆநந்த மயனாகிய எம்பெருமானைத் தாங்கிக்கொண்டிருக்கும் பெருமையுடை யவராதலால், அவனுடைய ஸௌகுமார்யம் (மிருதுவாயிருத்தல்) முதலிய குணங்கள் அவருக்கே நன்கு புலப்படும். அந்தக் குணங் களில் ஈடுபட்டு மிக்க அன்புடையவராய்த் தம் நிலைமையை மறந்து விடுவார். அதனால் 'இவ்வஸ்துவுக்கு என்ன தீங்கு நேருமோ' என்று பாதுகாக்கத் தொடங்குவராதலால் அவருக்குக் கோபமுண் டாம். கோபமுண்டாவதற்குச் சம்பவமே யில்லாத திருவரங்தாழ்வா னுக்குத் திருமேனியின் வடிவழகு கோபத்தை யுண்டாக்கியதென் றால் அதன் பெருமை என்னென்றெடுத் தியம்புவது!

ஓர் பிரபுவானவன் விலையற்ற இரத்தினஹாரத்தைப் பாதுகாவ லான ஓர் அரங்கில் வைத்துப் பூட்டி, அதனைச் சுற்றிப் பல காவலா களை அல்லும் பகலும் காவல் புரியும்படி செய்தான். அவர்களும் காவற்சோர்புபடாமல் காத்துவந்தார்கள். இதனை நன்கறிந்த பிரபு வானவன், 'இந்த இரத்தின ஹாரம் வைத்த விடத்தி லிருக்கிறதா? இல்லையோ?' என்று சம்சயங்கொண்டு அடிக்கடி அரங்கினைத் திறந்து பார்த்துக்கொண்டிருப்பான். இங்குச் சம்சயப்படுதற்கு இடமில்லாதிருந்தும் ரத்னஹாரத்திலுள்ள ஆசைமிகுதியானது அந்த ஸ்ரீமானுக்குச் சம்சயத்தை யுண்டாக்கியது. இதனால், 'இரத்தின ஹாரம் விலையற்றது' என்று ஹாரத்தின் பெருமை யுணரப்படும். அதுபோல திருவரங்தாழ்வானும் மதி மயங்குதற்குக் காரணமா யிருந்தது எம்பெருமான் திருமேனியின் வடிவழகென்று அதன் ஒப்புயர்வற்ற பெருமை உணரப்படும்.

பெரியபிராட்டியார் எம்பெருமான் திருமார்பில் நித்தியமாக எழுந்தருளி யிருக்கிறாள். நீருக் குக் குளிர்ச்சிபோல் பரவஸ்து வானது பிராட்டியுடன் கூடியே யிருக்கும். "இவளோடு கூடியே வஸ்துவி னுடைய உண்மை" என்று லோகதேசிகன் அருளிச்செய்த தா லுமறியலாம். இங்ஙன மிருக்கின்ற பிராட்டியார் எம்பெருமானை விட்டுப் பிரிவதற்குப் பிரசக்தியேயில்லை. அவ்வாறிருக்கவும் "அகல கில்லேனிறையும்" "அகலகில்லே னிறையும்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். எம்பெருமான் திருமேனியில் எழுந்தருளியிருப் பதா லுண்டாகிய இனிமையானது, பிராட்டியாருக்கு மதிமயக் கத்தைப் பிறப்பித்து ஒரு க்ஷணப்பொழுதும் உன்னை விட்டுப் பிரியேன் என்று வாய்விட்டுச் சொல்லும்படி செய்கிறது.

எம்பெருமான் திருமேனியின் வடிவழகா லுண்டாகின்ற அஞ் ஞான விசேஷமானது பெரியார்க்கு எப்பொழுதும் நிகழுமென்பது, திருவரங்கத்தாழ்வான் பெரியபிராட்டியார்களின் அநுஷ்டானங்களால் விளக்கப்பட்டது.

மேலும், "ஆழியொடும், பொன்னார்சார்ங்கமுடைய வடிகளை, இன்னாரென்றறியேன்" என்ற அருளிச்செயலை நோக்கினால் எம் பெருமா னுடைய அப்பொழுதைக்கப்பொழுது தோன்றுகிற விசித்ர சோபையானது அறியாமையைப் பிறப்பிக்குமென்பதை நன்கறிய லாம். இங்கு, திருவாழியாழ்வானையும், சார்ங்கம் என்ற வில்லையும் தரித்துள்ள ஸ்வாமியென்று அடையாளமிட்டுணர்த்திப் பின் 'இன்னா ரென்றறியேன்' என்றார். இதனால் வடிவழகானது அறியாமையைப் பிறப்பிக்கிறதென்பது பெறப்படும்.

இன் னும் "மைப்படி மேனியும்" என்பதற்கு, "அநுஸந்தித் தார் நெஞ்சிலே இருள்படியும்படியான திருமேனியும்" என்று பட்ட ரருளிய உரையும், "அழகு அஜ்ஞானத்தை விளைக்கும்" என்று லோகதேசிகன் அருளியதும் இங்கறியத்தக்கன. பெரியாரின் மதியை யும் மயக்குகிற எம்பெருமான் வடிவழகு எவ்வாறு கொண்டாடப் பட்டதாயிற்றோ, அவ்வாறே அவன் திருமேனியை விஷயமாகக்

கொண்ட அப்பெரியாரின் அஜ்ஞான விசேஷமும் கொண்டாடத் தக்கதாம்.

இதுவரையுங் கூறியதினால், எம்பெருமானுடைய திருமேனியின் சோபையானது, பெரியபிராட்டியார், திருவநந்தாழ்வான், மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்கள் என்ற இப்பெரியார்களையும் மதி மயங்கச்செய்யுமென்பதும், இவ்வழியாமை நித்யமாயுள்ள எம்பெருமான் திருமேனியை விஷயமாகக்கொண்டதனால் எப்பொழுதும் இவர்கட்கு நிகழ்ந்துகொண்டிருக்கும் என்பதும், இப்படி இவர்களை வடிவழகுபடுத்துவதால் அதன் சிறப்பு அளவிடத்தக்கதில்லை யென்பதும், இந்த வடிவழகுபற்றித் தோன்றிய அஜ்ஞான விசேஷமும் கொண்டாடத்தக்கதென்பதும் குறிப்பிடப்பட்டன.

ப. அ.

---

ஸ்ரீ:

# வேதபுருஷனுக்கும், கலிபுருஷனுக்கும் ஸம்வாதம்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வேத—கலிபுருஷா! முன் வெளியேறிய திவாகரத்தில் உன்னுடைய முதல் தீர்மானத்தைக் கேட்டேன். இனி இரண்டாவது தீர்மானத்தையும் விரித்துரைப்பாய்.

கலி—பிராமணர்களை வேதமோதுகின்ற தொழிலினின்றும் வேறுபடுத்தல் என்னுடைய இரண்டாவது தீர்மானமாகும். இந்த தீர்மானத்தை விரைவில் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்துவிட்டேன். நீரே பிராமணர்கள் வீட்டில் புகுந்து கேட்பீரேல் ஆங்கில பாஷையின் ஒலிதான் பெரும்பாலும் கேட்கப்படும். பிராமணர்கள் வேதமோதுவதை மறந்து விடுவார்களாகில் யாகாதி காரியங்களைச் செய்யமாட்டார்கள். அவர்கள் அக்காரியங்களைச் செய்யாதபோது தேவதைகள்

திருப்தராகார். அவர்கள் திருப்தராகாதபோது மழை பெய்தற்குரிய பருவங்களில் பெய்யாது. அது பெய்யாத போது உலக வாழ்க்கை சங்கடப்படும். அப்பொழுது என்னுடைய மந்திரிமார்கள் ஆநந்தக்கூத்தாடுவார்கள்.

வேத—உலகம் செழிப்படையாவிட்டால் உன்னுடைய மந்திரிகளுக்குக் குதூகலமுண்டாகுமோ?

கலி—ஆம். ஏன் உண்டாகாது? உலகம் செழிக்காதபோது பொய் கொலை களவு முதலியவைகளே அதிகமாகும். அவைகளே என்னுடைய மந்திரிகளென்று முன்னரே சொன்னேன்.*

வேத—உலகத்தின் கெடுதிக்குப் பிராமணர்கள் தம் தொழிலை விட்டு விடுதலே காரணமென்று கூறினை. அதை இன்னும் விரித்துரைப்பாய்

கலி—"ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவானெனின்" இங்கு, அரசன் நீதி தவறியபோது உலகம் அழியுமென்பார் 'ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்' என்றார். ஆபயன் குன்றுதலாவது, பசுக்களின் பால்குறைந்து விடுதலாம். அது குறைந்துவிட்டால் அதனாலாகும் அவியாகிய தேவருணவு இல்லையாம். அஃதில்லாதபோது அது கொடுத்தற்குரிய பிராமணர்கள் வேத மந்திரங்களை ஓதமாட்டார்கள். அதனால் வேள்வி நடைபெறாது அது நடவாதபோது தேவர்கள் திருப்தராகார்கள். அவர்கள் திருப்தராகாதபோது மழை பெய்யமாட்டா. அதனால் உலக வாழ்க்கை நடைபெறாது. ஆகவே உலகம் கெடுதற்குப் பிராமணர்கள் தம் தொழிலை விட்டு விடுதலும் பரம்பரா காரண மாகுமன்றே.

வேத—இன்னும் உன்னுடைய தீர்மானங்களின் விசித்திரங்களை எடுத்துரைப்பாய்.

கலி—பிராமணர்களில் பெரும்பாலரையும் வேதமோதுதலை மறக்கச் செய்தது மாத்திரமல்லாமல் அவர்கட்கு அன்னிய பாஷையைப் படிப்பதில் உத்ஸாகத்தையு முண்டு பண்ணி

விட்டேன். அதனால் அவர்கட்கு நடை உடை பாவனையெல்லாம் மாறிவிட்டன. அநேக பிராமணர்கள் ஐரோப்பியர்களைப்போலாகிவிட்டார்கள். இது விஷயத்தை யான் சொல்லித் தெரியவேண்டுமென்பதில்லை, நீரே கண்கூடாகப்பார்க்கலாம். இஃதெல்லாம் ஒரு புறமிருக்க, கேட்பாரெல்லாம் ஆச்சரியப்படத்தக்க ஓர் செயல் செய்துள்ளேன். அதனை நீர் கேட்பீரேல் வியப்படைவீர்.

வேத—அஃதென்ன விசித்திரச் செயல்; அதனை எடுத்துரைப்பாய்.

கலி—பகவந்நாமத்தை எவர்கள் எப்படிச் சொன்னாலும் அவர்கள் ஸத்கதியடைவார்கள். கொடிய பாபியாகிய அஜாமீளன் என்பவன் உயிர்விடுகின்ற காலத்தில் நாராயணன் என்னும் பெயருடைய தன் புதல்வன்மீதுள்ள அன்பினால் நாராயணா! நாராயணா!! என்றழைத்து உயிர் துறந்தான். அதனால் அவன் கொடிய பாபத்தினின்றும் விடுபட்டு ஸத்கதி யடைந்தான். க்ஷத்ரபந்து என்பவன் கோவிந்தநாமத்தைச் சொல்லியதால் முக்தியடைந்தான். முற்கலனும, யமனும் பகவந்நாமத்தைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தகாலத்தில் இதனைக் கேட்டுக்கொண்டிருந்த நரகானுபவவாசிகளெல்லாம் ஸ்வர்க்கலோக சுகத்தை யனுபவித்தார்கள்; என்ற வரலாறுகள் இதிகாசத்திற் கேட்கப்படுகின்றன. இதனால் பகவந்நாமோச்சாரணத்திற்கு மிகுந்த பலனுண்டென்று தெரிந்துகொண்டேன்.

வேத—உன்னுடைய ராஜ்யத்தில் பகவந்நாமோச்சாரணம் நடைபெற்று வருகிறதா?

கலி—ஓ! ஓ!! அதைக் கேட்டீரா? என்னுடைய ராஜ்யத்தில் பகவந்நாமோச்சாரணம் நடைபெறாதிருக்கவேண்டும் என்று சூழ்ச்சி செய்தேன். அதனால் ராமசாமி ஐயர் என்ற பெயரை ஆர். எஸ் ஐயரென்றும், ஸ்ரீதர நாயுடு என்ற பெயரை சீதர் நாயுடு என்றும், கோவிந்தசாமி பிள்ளை என்ற பெயரை கெ. எஸ். பிள்ளை யென்றும் பெயர்மாற்றிக்கொள்ளத் தலைப்

பட்டுவிட்டார்கள். என்ன பார்த்தீரா என்னுடைய சாமர்த்தியத்தை. பகவந்நாமத்தைச் சொல்வதில் அவர்களுக்கு அவ்வளவு அருவருப்பை யுண்டுபண்ணிவிட்டேனே. இன்னும் சிலர் ஆங்கிலேயர்களைப்போல் நமக்கு ஏன் பெயர் வைக்காதொழிந்தார்கள் என்று தாய்தந்தையரிடத்தில் வெறுப்புடையவராயுமிருக்கின்றனர்கள்.

**வேத**—ஐயோ! பாபம்! பகவந்நாமத்தைப்புத்திரர்கட்கு இட்டதினல், அப்புத்திரர்கள் தாய் தந்தையர்களை வெறுத்துக்கொள்கிறார்களா? என்ன விபரீத காலம்.

**கலி**—யான் இங்கு உம்மிடத்திற் சொல்வனவெல்லாம் மூடமந்திரமில்லை. அவர்கள் வெறுப்புடையவராயிருக்கும் நிலைமையை நீரே நேரிற் பார்த்துக்கொள்ளலாம்.

**வேத**—ஆசையற்று எம்பெருமானைத் தஞ்சமென்றடைந்து உய்வதற்குப் பக்குவமில்லாதவர்களும் ஏதேனும் ஒரு வழியில் பகவந்நாமத்திற் சம்பந்தமுண்டாக்கவேண்டும் என்று அவர்களை நோக்கி, 'நீங்கள் ஏதேனும் அற்ப பலனை எண்ணி, பிராகிருத வஸ்துக்களின் தாழ்மையான பெயரையிடாதீர்கள்; அவ்வாறு செய்வதால் நீங்கள் நினைத்திருக்கிற பலன் கைகூடாது; மறுமைக்கும் உதவாது; ஆனபின்பு அதைவிட்டு, பிச்சையெடுத்தாகிலும் பகவானுடைய திருநாமத்தைப் பெற்ற பிள்ளைகளுக்கு இடுங்கள்; இவ்வளவுமாத்திரஞ் செய்தாலும் நீங்கள் உய்ந்துவிடுவீர்கள்' என்று பெரியார்* ஒரு பத்துப் பாசுரங்களால் குறிப்பிட்டிருக்கின்றனரே. கலியுக மாந்தர்கள்

---

*"காசுங்கறையுடைக்கூறைக்குமங்கோர்கற்றைக்கும்
ஆசையினல்அங்கவதப்பேரிடுமாதர்காள்
கேசவன்பேரிட்டுநீங்கள்தேனித்திருமினே
நாயகன்நாரணன்தம்மன்னைநரகம்புகாள்."

இது, பெரியாழ்வாரருளிய பாசுரம். இன்னும் இதுபோன்ற ஒன்பது பாசுரங்களால் இவ்விஷயத்தை விரிவாக அருளிச்செய்துள்ளார். இந்தப் பாசுரத்தின் பொருள் வருமாறு:— சாதாரண மனிதரிடத்தில் காசுக்கும், கறைகட்டியுள்ள வஸ்திரத்திற்கும், சிறிது நெற்கற்றைக்கும் ஆசையினல்

இதையுமறியாதொழிகின்றனரே, அந்தோ! இப்புதல்வர்கள் பகவந் நாமத்தைத் தமக்கிட்டதையும பொறுக்காத இவர்களோ, தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய்யப்போகிறார்கள்; இல்லை; இல்லை.

கலி—என்னுடைய இராஜ்யபரிபாலனத்தில் நீர் இப்படிப், பரிதாபப்படுவதால் பிரயோஜனமென்ன?

வேத—"அன்னையும்பிதாவும் முன்னறி தெய்வம்" என்றபடி புதல்வர்கட்கு மாதா பிதாக்களே முன்னறியப்பட்ட தெய்வமாவார்கள். இன்னும் மாதா பிதாக்கள் செய்த நன்றியை நோக்கினால் புத்திரர்கள் அவர்களுக்கு எவ்வளவோ பணிவிடை செய்வதற்குக் கடமைப்பட்டவராவர். இவ்வாறிருக்க, புத்திரர்கள் மாதா பிதாக்கட்குப் பணிவிடை செய்யாதொழிந்தாலும் அவர்கள் விஷயத்தில் புத்திரர்கள் வெறுப்புடையவர்களாயிருக்கிறார்களென்பது எவ்வளவு கொடுமை! இக்கொடுஞ் செயலைக்கண்ட இரக்கசித்தமுடையவர்கள் எவர்தாம் பரிதாபப்படாதொழிவர்?

கலி—என்னுடைய இராஜ்யத்தில் நடைபெறுகிற விஷயத்தைக்கண்டு உம்மைப்போன்றவர்கள் பரிதாபப்பட்டுத்தான் தீரவேண்டும். இதற்கென்னசெய்வது.

வேத—நீ கூறுவதைக் கேட்கக்கேட்க என் மனம் புண்ணாகிறது. ஆதலால் இன்னும் சில நாட்கழித்துக் கேட்கிறேன். அதன் பிறகு விடையளிப்பாய்.

(தொடரும்)

---

தாழ்மையுள்ள பெயரையிடுகின்ற இழிவானவர்களே! கேசவனுடைய திருநாமத்தை உங்கள் பிள்ளைகளுக்கு வைத்து நீங்கள் மனமகிழ்ந்து இருங்கள். எல்லாருக்கும் தலைவனும், நாராயணனுமானவன் திருநாமத்தை யுடையவனது தாயானவள் நரகத்தை யடையமாட்டாள்; என்பதாம்.

ஸ்ரீ:

# கோப்பெருஞ்சோழன் இயற்றிய "செய்குவன்கொல்லோ" என்ற பாட்டின் ஆராய்ச்சி.

---

"செய்குவன் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மருஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவ னானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனிற்
றொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப் பினின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே"

கோப்பெருஞ் சோழன் *வடக்கிருந்தபோது சொல்லியது. இதற்குப் பழையவுரை வருமாறு:—

இ-ள்.—அறவினையைச் செய்வேமோ அல்லேமோ என்றுகருதி ஐயப்பாடு நீங்கார், அழுக்குச்செறிந்த காட்சி நீங்காத உள்ளத்தினையுடைய தெளிவில்லாதோர்; யானைவேட்டைக்குப்போவோன் யானையையும் எளிதாகப்பெறுவன்; குறும்பூழ் வேட்டைக்குப்போவோன் அதுபெறாது வறிய கையினனாயும் வருவன்; அதனால் உயர்ந்த விருப்பத்தையுடைய உயர்ந்தோர்க்குத் தாம் செய்யப்பட்ட நல்வினைக்கூற்றிலே அதனை அனுபவித்தலுண்டாமாயின் அவர்க்கு இருவினையும்

---

* வடக்கிருத்தலாவது—மானமுடைய பெரியார் இன்றியமையாததோர் காரணம்பற்றி. உயிர் துறக்கக் கருதியபோது சிறந்ததோரிடத்திற் சென்று வடதிசை நோக்கியிருந்து இறைவனைத்தியானித்துக்கொண்டு உணவின்றி உயிர்துறத்தலாம்.

செய்யப்படாத உம்பருகைத்தின்கண் இன்பமனுபவித்தலுங்கூடும்; அவ்வுலகத்தின்கண் நுகர்ச்சியில்லையாயின், மாறிப்பிறத்தலிலே கூடும் பிறப்பின்கண் இன்மையெய்தவுங்கூடும்; மாறிப்பிறவாரென்று சொல்லுவாருளராயின் இமயமலையின் சிகரம் ஓங்கினாற்போன்ற தமது புகழை நிலைபெறுத்தி வசையில்லாத உடம்பொடு கூடிநின்றிறத்தல் மிகத்தலையாயது; அதனால் எவ்வாற்றானும் நல்வினைசெய்தல் அழகிது.—எ-று.

உயர்ந்திசினோர்க்கென்னும் நான்காவதன்றியும் உயர்ந்திசினோர் செய்வினை மருங்கினெய்தலுண்டெனின், இவர்க்கு நுகர்ச்சியுங்கூடு மென்றுரைப்பினுமமையும். 'காட்சியொடு நீங்கா நெஞ்சத்து' என்பதூஉம் பாடம். 'பிறவாராயினும்' என்னும் உம்மை—அசைநிலை; உம்மையின்றி யோதுவாருமுளர்.

இந்த உரையினால் இச்செய்யுளின் சிறந்த பொருள் விளங்காமையின் ஈண்டு இதற்கு விரிவானவுரை யெழுதப்பெறுகிறது.—

செய்குவன் கொல்லோ நல்வினை யெனவே ஐயமறூஉ என்றது நல்வினையைச் செய்தல் நலமோ? நலமன்றோ? என்னும் ஐயம் நீக்கார் என்றவாறு. நல்வினையினைச் செய்தற்கும், தவிர்தற்கும் அந்நல்வினையின்கண்ணுள்ள நலம், நலமின்மைகளின் ஞானம் காரணமாதலின், அச்செயலின்கண்ணுள்ள ஐயத்தினை அதற்கு ஏதுவாகிய ஞானத்தின் மேலேற்றிப் பொருள் கூறப்பட்டது.

ஐயமாவது—ஒரு பொருளின்கண் மாறுபட்ட இரண்டு விசேடணவுணர்வு அஃதாவது—சேய்மைக்கண்ணுள்ள குற்றியைக் குற்றித்தன்மை தர்மவிசிஷ்டமாயும், மகன்தன்மைத் தர்மவிசிஷ்டமாயும் உணர்வதாம். குற்றித்தன்மை நிச்சயத்திற்குத் தடையாகிய இச்சம்சயவுணர்வு, சேய்மைத்தன்மை முதலிய தோஷங்கள் உள்ளவிடத்தே நிகழ்வதாகலின், ஈண்டு இஷ்டசாதனத்தன்மை ரூபமான நன்மையோடு கூடிய அறத்தின்கண் நன்றோ? நன்றன்றோ? என்ற மாறுபட்ட இரண்டு தர்மவிசிஷ்ட சம்சயம் நிகழ்வதற்கு ஏது யாதெனின்;—அதனைப் பின்வரும் வாக்கியத்தால் விளக்குகிறார்.—

கசடீண்டு காட்சி என்றது அழுக்குச்செறிந்த காட்சி யென்றவாறு. ஈண்டுக்காட்சி யென்றது ஞானத்தினை. அதனை மறைப்பதாகிய

மூனத்தின்கண்ணுள்ள அழுக்கினை ஞானத்தின் மேலேற்றி அழுக்குச் செறிந்த காட்சியெனச் சாமானுதிகாண்ய சம்பந்தம்பற்றிக் கூறப் பட்டது. காட்சியென்னும் சிறப்புப்பெயர் ஈண்டு ஞானமாத்திரத்தை யுணர்த்திநின்றது. இது, ஞானத்தினை நித்யத்திரவியமாகக்கொண்டு அது, மனத்தின்வழியாக விஷயதேசத்தையடைகின்றதென்று கூறும் வேதாந்த வழக்குப்பற்றி வந்தது. நம்மாழ்வார் "மனனகமலமற" என்றதும் இக்கருத்துப்பற்றியதே.

'நீங்காநெஞ்சத்துத் 'துணிவில்லோர்' என்றது அவ்வழுக்குச் செறிந்த காட்சி நெஞ்சத்து நீங்காமையால் தெளிந்த ஞானமில்லா தார் என்றவாறு. அது வருமாறு.—எங்ஙனம் தீபப்ரகாச முதலிய வற்றைத் தம் மூலமாக வெளியிடும் தர்ப்பணம் (கண்ணுடி) முதலியன அழுக்குப்படிந்திருந்தால் அதன் மூலம் வெளிப்படும் பிரகாசம் மாசடைகின்றதோ, அங்ஙனமே ஞானத்தினைத் தன் மூலமாக வெளி யிடும் மனமானது மாசுற்றிருக்கின் அதன்மூலம் வெளிப்படும் ஞானமும் மாசடைதலால் களங்கமில்லாத ஞானத்தின் விஷயமாகிய யதார்த்த நிச்சயம் களங்கத்தோடு கூடிய ஞானத்தின் விஷயமாகை யின் அழுக்குச்செறிந்த காட்சி நீங்கா நெஞ்சத்துணிவில்லோர் என்ருர். இதனுல் மனமாசற்றுத் தெளிந்த ஞானமுடையராய் நல் வினைசெய்யுமாறு கூறப்பட்டது.

இனி, அம்மனமாசுடையாரின் சங்கையை உட்கொண்டு சமா தானங் கூறுகின்ருர்; 'யானை வேட்டுவன்' முதலிய வாக்கியங்களால். அச்சங்கையின் கருத்தாவது—மறுமையில் எய்தும் பயனைக்கருதி இம்மையிற் செய்யப்படும் நல்வினையானது அதிக நாட்களிற் செய்யப் படும் மிகுந்த முயற்சியால் முற்றுப்பெறுதலின்; "நெருநல் உளனெரு வன் இன்றில்லை" யென்னும் முதுரைப்படி யாக்கை நிலையின்மையா னும், நிலைப்பினும், ஊழ்வசத்தால் வரும் இடையூறுகளால் அம் முயற்சி தடுக்கப்படினும் படுமாதலானும் அந்நல்வினைமுற்றிப் பய னெய்தல் ஒருதலையன்று. அதனின், " நாளைக்கிடைக்கும் பலாப் பழத்தினும், இன்றுகிடைக்கும் களாப்பழம் இனிது " என்னும் பழமொழிப்படி உடனே எய்தப்படுவனவும், செய்த வுடம்பால் நுகரப்படுவனவுமாகிய பொருளின்பங்கட்கு ஏதுவாகிய முயற்சி

யினைச்செய்து, பயனெய்தல் ஒருலையாகலான் இதுவே சிறப்புடைத்த தென்பதாம். இதனை* "எனைப்பலவேயாயினும் சேய்த்தாய்ப்பெறி லில், தினைத்துணையேயாயினும் அணிக்கோடனன்றே" என்பதும் வலி யுறுத்தும். இதனால் நல்வினையானது இடையூறின்றி இனிதுமுடி தல் சம்சயமென்றும், ஏனைய பொருளின்பங்களை ஈட்டுதல் நிச்சய மென்றும் கூறப்பட்டன.

இனி, இவ்வாதிகூறிய நியமத்தைப்பங்கம்செய்யவே பொருளின் பங்களிற் சிறந்ததென்று தம்மால் துணியப்பட்ட நல்வினையினைச் செய் தலே நன்றென்பது தானே பெறப்படுமாதலின், பன்னிரண்டு வாக்கி யங்களாலும் அங்கியமத்தைப் பங்கஞ்செய்கிறார்.—

'யானைவேட்டுவன் யானையும்பெறுமே' என்றது மிகவும் உயர்ந்த பலனாகிய யானையை யடையக்கருதி வேட்டையாடச் சென்றவன், நல்வினை வந்தெய்தியபோது அதனையும் எளிதாகப் பெறுவன் என்ற வாறு. குறும்பூழ் வேட்டுவன் வருங்கையும் வருமே என்றது மிகவும் அற்பப்பலனாகிய காடையை யடையககருதிச் சென்றவன் நல்வினை யெய்தாவிடத்து அதுவும் பெறாது வறியகையினனாய் வருவன் என்ற வாறு. இவ்விரண்டு வாக்கியங்களாலும் அற்பப்பயனின் விருப்பம், அதனையடைதற்கேதுவென்றும், உயர்ந்த பயனின் விருப்பம் அதனை இழத்தற்கேது என்றும் கூறுவாரைநோக்கி, அற்பப்பயனின் விருப்ப மாகிய காரணமுள்ளவிடத்தும் காரியமுண்டாகின்றதில்லையென்றும், அற்பப்பயனின் விருப்பமாகிய காரணம் இல்லாதவிடத்தும் (உயர்ந்த பலனின் விருப்பமுள்ளவிடத்தும்) காரியமுண்டாகின்றதென்றும் அக்வய வியதிரேக வியபிசாரங்காட்டி அங்கியமமில்லையென்றாராதலின், அங்கியமத்திற் கேதுவாகிய நல்வினையும் அதனின்மையும் வருவித் துரைக்கப்பட்டன. யாண்டு நல்வினையுண்டு, ஆண்டுக் காரியசித்தி யுண்டு, யாண்டு நல்வினையின்று ஆண்டுக் காரியசித்தியின்று, என்ப தாக அக்வய வியதிரேக உடனிகழ்ச்சி யுண்டாவதறிக. "தவமும் தவமுடையார்க்காகும்" என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

இதனால் உயர்ந்த பலனைக் கருதினவன் இழந்துவிடுவான் என் றும், அற்பப்பயனைக் கருதினவன் பெற்றுவிடுவானென்னும் நியமம்

* பழமொழி 68-ம் செய்யுள்.

இன்மையால், ஒருவன் பெறுதற்கும், இழப்பதற்கு அவ்வனது நல்வினையும் அதன் இன்மையுமே காரணமாகுமென்று கூறினர்.

ஒருவனிடத்திலுள்ள நல்வினை தீவினைகள் 'அதீந்திரியமானதால் (தோற்றாதலால்) அவை அறியப்படாமையாலும் தாழ்ந்த பலனை அடையக்கருதினும், அதுவும் நல்வினையின்றி அடையப்படாமையாலும், அந்நல்வினையுள்ளவிடத்து உயர்ந்த பயனும் எளிதாக அடையப்படுமாதலாலும், அவ்விருபயன் எய்தற்கும் ஒருவன் முன்செய்த நல்வினையே காரணமாதலின் தாழ்ந்த பலனைக்காட்டிலும் உயர்ந்த பலனை யடையக்கருதுவதே சிறப்புடைத்தென்பது போந்தபொருளாம். இப்பொருளையே பின் அதனல் என்ற சுட்டினுல் உணர்த்துகிறார்.

இராகவராமாநுஜ தாஸர்.

(தொடரும்)

---

ஸ்ரீ

# மதிப்புரை.

---

வாசவி:—இஃதோர் ஆந்திர மாதப் பத்திரிகை. ஏழாண்டு முடிவாக வைசிய மக்கட்குப் பெரிதும் உபகாரமாக உழைத்து வருகிறது. பல்லாண்டுகளாக ஆந்திர லிபியில் ஆந்திர பாஷையிலே யெழுதப் பெற்று வெளிவந்தது. இப்பொழுது தமிழ் நாட்டிலுள்ளவர்கட்கும் உபகாரமாக வேண்டுமென்ற நன்னோக்கத்தோடு, இது தமிழ் மொழியிலும் எழுதப்பெற்று விளங்குகிறது. இதில் முற்கால நிலைமையைக்குறித்தும், தற்காலவியல்பைப்பற்றியும் பல அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் காணப்படுகின்றன. வருஷச் சந்தா ரூ. 2—0—0. வேண்டுவோர் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.

"வாசவி" காரியாலயம்,

36, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.

---

**தமிழ்ப் பேரகராதி:**—சென்னைச் சர்வகலாசங்கத்தார் நீண்ட பலகாலமாக விடாமுயற்சியோடு பதிப்பித்துவரும் இவ்வகராதியின் ஐந்தாவது தொகுதியின் நான்காவது பகுதி இப்பொழுது வெளியாயிருக்கிறது. சொற்பொருளுணர்வார்க்குச் சாதகமாகப் பலவரிய தமிழ்மொழிகட்கும், தமிழ் மொழியோடிணைந்து வழங்கப்பெறும் வடசொற்கட்கும் பொருள்கள் எழுதப்பெற்றுள்ளன. பல பண்டிதர்களின் ஆராய்ச்சியால் இது சிறப்புற்று மிளிர்கிறதென்பது இதனைக் கண்ணுற்றார் யாவருக்கும் நன்கு புலனாகும். இதில் 'மதிஞானம்" என்ற சொன்முதல், "மீனேறு" என்ற மொழியிறுதியாகப் பல தமிழ்ச்சொற்கட்குப் பொருளெழுதப்பெற்றுளது. மொழிகட்குத் தமிழ்ப்பொருளோடு ஆங்கிலத்திலும் பொருளெழுதப்பெற்றுள்ளதால் ஏனைய அகராதிகளைக்காட்டிலும் இதற்குத்தனியே ஓர் சிறப்புண்டு. இப்பணியை மேற்கொண்ட அதிகாரிகளின் முயற்சியும், ஊக்கமும் போற்றத்தக்கன.

159 பக்கங்களுள்ள இப்பகுதியின் விலை ரூ. 2—0—0.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்க.

The Madras Law Journal Office,
Post Box 604, Mylapore,
MADRAS.

பத்திராதிபர்.